DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**CC. No. 87/2025**

**Deposition of LW2 examined as PW2 (Victim)** Dt. 15.09.2025

| | |
|---|---|
| Name | சுசிலா |
| Father's/Husband's Name | ரவி |
| Village | செம்பதனிருப்பு |
| Taluk | மயிலாடுதுறை |
| Age | 43/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 15.09.2025

(A2, A3 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 14.07.2024 அன்று காலை 9.30 மணியளவில் நான் எனது வீட்டின் பின்பகுதியில் கொல்லைபுறத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். எனது மகனும், எனது கணவரும் வீட்டின் வாசல் புறம் இருந்தனர். எங்களிடம் 10,15 கோழி இருந்தது. எதிரிகளாகிய தீனதயாளன், பிரசாத்குமார், செல்வகுமார் ஆகியோர் அவர்களது வயலில் விஷம் கலந்த மருந்தை வயலில்கோழிகள் மேயக்கூடாது என்பதற்காக போட்டு கொண்டு இருந்தனர். நாங்கள் நடந்து போகிற இடமான எங்களது இடத்தில் விஷம் கலந்த மருந்தை தெளித்தனர். அதற்கு நான் எதிர்ப்பு தெரித்து போது எதிரி பிரசாந்த்குமார், செல்வகுமார் ஆகிய இருவரும் குச்சிக்காரி, தேவிடியா என்று திட்டினார். மேற்படி இருவரும் எனது முடியை பிடித்து இழுத்து, அவர்களது வயல் சேற்றில் தலையை அமுத்தினார்கள். பிரசாத்குமார், என்னை பிடித்து கொள்ள என்னை செல்வகுமார் கட்டையால் தலை மற்றும் முகத்தில் அடித்தார்கள். எனது மகனும், எனது கணவரும் சத்தம் கேட்டு தடுக்க வந்தவர்களை பிரசாத்குமார், செல்வகுமார், தீனதயாளன் கட்டை மற்றும் இரும்பு கம்பியால் அடித்தார்கள். தீனதயாளன் கட்டையால் எனது கணவரை தலையில் அடித்தார். எனது மகனை மற்ற எதிரிகள் பிடித்து கொள்ள செல்வகுமார் கட்டையால் உச்சி தலையில் அடித்தார். உங்களை கொன்றுவிடுவோம் என்று எதிரி பிரசாந்த்குமார் மற்றும் செல்வகுமார் கொலை மிரட்டல் விடுத்தார்கள். எதிரிகள் எங்களை தாக்கயதில் எங்களுக்கு சுயநினைவு இல்லாமல் போனது. அந்த வழியாக வந்த ரஞ்சித்குமார் மற்றும்

R.Susila

மோகன் அந்த வழியாக வந்த டாடா ஏசி வாகனத்தில் கீழையூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலமாக அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். நாங்கள் மூவரும் மருத்துவனையில் 8 நாட்கள் தங்கி உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டோம். எனக்கு கண்ணில் சேறுபட்டதாலும் தலையில் ரத்தகட்டு இருந்தாலும் 8 நாட்கள் உள் நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். எனது கணவருக்கு தலையில் அடிபட்டு 7 தையல்கள் போட்டனர். எனது மகனுக்கு உச்சி மண்டையில் 9 தையல்கள் போட்டனர். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

எனது முதல் விசாரணையில் எனது கணவரும், எனது மகனும் வீட்டு வாசலில் இருந்ததாகவும், நான் வீட்டின் கொல்லைப்புறத்தில் இருந்ததாகவும், எங்களிடம் 10, 15 கோழிகள் இருப்பதாகவும், எதிரிகள் அவர்களது வயலில் கோழிகள் மேயக்கூடாது என்பதற்காக விஷம் கலந்த மருந்தை போட்டுக் கொண்டிருந்தனர் என்றும், ரஞ்சித் குமார் எங்களை டாடா ஏசி மூலம் கீழையூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றும், தெரிவித்த விபரங்களை போலீசார் விசாரணையில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். அதுபோல் பிரசாந்த்குமார் என்னை பிடித்துக் கொண்டதாகவும், செல்வகுமார் என்னை தாக்கியதாகவும் முதல் விசாரணையில் தெரிவித்த விபரங்களை எனது போலீசார் விசாரணையில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். எதிரிகள் மூவரும் எனது கொழுந்தனார் மகன்கள் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் இட பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். சம்பவத்தில் எதிரி பிரசாந்த்குமாருக்கு காயம் ஏற்பட்டு சிகிச்சையில் இருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். கீழையூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் விசாரணையின் போது எனக்கு ஏற்பட்ட காயம் நான் தடுமாறி கீழே விழுந்ததால் ஏற்பட்டதாக மருத்துவரிடம் தெரிவித்தேன் என்றால் சரியல்ல. 1–வது எதிரி பிரசாந்த் குமாருக்கு நான் தாக்கியதால் தான் அவருக்கு காயம் ஏற்பட்டு சிகிச்சையில் இருந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு அவருக்கு பல வகையில் இன்னல்களை கொடுத்து மன உளைச்சலை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. தற்போது 1–வது எதிரி பிரசாத்குமார் என்ன ஆனார் என்றால் அவர் தற்கொலை செய்து கொண்டதாக கேள்விப்பட்டேன். நானும், என் குடும்பத்தினரும் கொடுத்த மன உளைச்சல் காரணமாகவே 1–வது எதிரி பிரசாந்த்குமார் தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. நான் பிரசாந்த்குமாரை தாக்கிய வழக்கிலிருந்து தப்பிப்பதற்காகவே இந்த பொய்புகாரை எதிரிகள் மீது கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல 2,3 எதிரிகள் சம்பவ சமயத்தில்

15.9.25

சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும், 1–வது எதிரி பிரசாத்குமாரை 2,3 எதிரிகள் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்து புகார் வாக்குமூலம் அளிக்க உதவியாக இருந்தார்கள் என்ற காரணத்தினால் எதிரிகள் மீது பொய்யான புகாரை கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் என்னை தலைமுடியை பிடித்து இழுத்து அடிக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2,3 எதிரிகள் என்னையோ, எனது கணவரையோ, என் மகனையோ தாக்கவில்லை என்றாலும், திட்டி கொலை மிரட்டல் விடுக்க வில்லை என்றாலும் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இடப்பிரச்சினை இருந்ததன் காரணமாகவும், 1–வது எதிரி பிரசாத்குமாரை நான் தாக்கிய வழக்கில் இருந்து தப்பிப்பதற்காகவும், எதிரிகள் மீது இந்த பொய்புகாரை கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R. Sujita

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

15.9.23

நீதித்துறை நடுவர் எண்-II
மயிலாடுதுறை